TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1972 ஏப்ரல் 3

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

பயிரிடும் விவசாயிகள் நிலவுடைமையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய பாக்கிகள்

*** 5 குறுகிய கால வினா—திரு. ஏ. ஆர். சுப்பையா:** மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடப்புப் பசலிக்கு நில உடைமையாளர்களுக்குத் தரவேண்டிய குத்தகையை பாக்கியின்றித் தந்திருப்பவர்களுக்கு, அவர்கள் 1380-வது பசலி முடிய செலுத்த வேண்டிய பழைய குத்தகை நிலுவை அனைத்தும் ரத்து செய்யப்படுவதற்கான சட்டம் கொண்டு வரப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டபின், பழைய பாக்கிக்கென இடப்பட்ட வழக்குகளைத் துரிதப்படுத்தி தீர்ப்பு வாங்கவும், பழைய பாக்கிகளை வசூலிப்பதற்கென ஏராளமான வழக்குகளை இடவும் நில உடைமையாளர்கள் முனைந்திருப்பதால், பயிரிடும் விவசாயிகளுக்கு ஏற்படும் இடர்பாடுகளை நீக்குவதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாடு சட்டப் பேரவையில் 28—3—1972-ல் முகவுரைக்கப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள், குத்தகைத் தொகை நிலுவைகள் (இடர்தணிப்பு) சட்டமுன்வடிவில் (தமிழ் நாடு சட்டம் 6/1972), மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட்டுள்ள

இடர்ப்பாடுகளைக் களைய விதித்துறைகள் அடங்கியுள்ளன. உத்தேசச் சட்டத்தின் 7-வது பகுதியில் பின்வருமாறு கண்டுள்ளது :—

குத்தகைத் தொகை நிலுவைகளைச் செலுத்தாத காரணத்தால் பயிரிடும் குத்தகைதாரர் ஒருவர், 1—3—1972 அன்று அல்லது அதற்குப் பிறகும், இச்சட்டம் வெளியாகும் தேதிக்கு முன்னரும் வெளியேற்றப்பட்டிருந்தால், தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, வரையறுத்த படிவத்திலும், காலத்திற்குள்ளும் விண்ணப்பித்துக் கொள்வதன்மேல், அவர் அவ்வாறு வெளியேற்றப்பட்ட தேதியன்று செயலிலிருந்த அதே நிபந்தனைகளின்கீழ் மீண்டும் அந்த நிலத்தின் உடைமை உரிமையைப் பெறத் தகுதியுள்ளவராவார்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: தலைவர் அவர்களே, ஸ்மால் காஸ் கோர்ட்டில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவற்றைத் துரிதப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் நிலவுடைமையாளர்களுக்கு இருந்துகொண்டிருக்கிறது. இந்த மசோதா சட்டமாவதற்குள் இடையில் ஒரு மாதம், இரண்டு மாதம் தாமதமாகும்போது தீர்ப்பு வழங்கக்கூடிய நிலையில் துரிதப்படுத்துகிறார்கள். அதற்கு ஏதாவது தடையோ அல்லது ஏதாவது வழிமுறைகளோ செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, சட்டம் நிறைவேற்றப்பட்டு, ஒப்புதல் ஆகி, மீண்டும் சட்டம் அமுலுக்கு வரும் தேதியிலிருந்து சட்டம் பலனுள்ளது என்று நான் சொல்லவில்லை. 1—3—1972-லேயே சட்டம் அமுலுக்கு வருகிறது என்று தெரிவித்திருக்கிறோம். மாமன்றம் சட்டமுன்வடிவை இன்று எடுத்துக்கொண்டு விவாதித்து நிறைவேற்ற இருக்கிறது. நிறைவேற்றப்பட்டதிலிருந்து ஆங்காங்கு நீதிபதிகள் அதற்கேற்றவாறு நடந்துகொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நடப்பு பசலிக்கு அவர்கள் பணம் கட்டியிருந்தால், அதைப் பழைய பாக்கிக்கு வரவு வைத்து, 'பாக்கி இருக்கிறது' என்ற முறையில் பல நிலச்

சுவாந்தார்கள் செய்வதாகத் தகவல் வந்திருக்கிறது அம்மாதிரி யாகச் செய்யக்கூடியவரைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1971 ஜூலை 1 அன்றி லிருந்து பசலி ஆரம்பமாகிறது. அந்தத் தேதியிலிருந்து பணம் கொடுத்திருந்தால், பழைய பாக்கிக்கு என்று குறித்து வைக்கப் பட்டிருந்தாலும் 1—7—1971 தேதிக்கும் பிறகு கொடுத்து இருந்தாலும் நிச்சயமாக இந்தப் பசலிக்கு வந்ததாகவே கணக் கெடுத்துக் கொள்ளப்பட்டு, அப்படிப் பழைய பாக்கிகளெல்லாம் ரத்து செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்கரை கைப்பற்று

*** 6 குறுகிய கால வினா—திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 மார்ச் மாதத்தில் சட்ட விரோதமாக இரண்டு ரயில் வாகன்களில் எடுத்துச் செல்லப்பட்ட சர்க்கரை, மாநில அரசு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தமிழ் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட 520 சர்க்கரை மூட்டைகளில் 321 மூட்டை கள் போலீசாரால் கைப்பற்றப்பட்டன.

(இ) வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, சர்க்கரை ஒரு புறத்தில் திருட்டுப் போகிறது. சர்க்கரையின் விலையை நிர்ணயிக்கிறபோது வெளி மார்க்கெட் விலை ரூ. 3.20 ஆக உயர்ந்திருக்கிறது. அதைத் தவிர்த்து நியாயமான விலையில் சர்க்கரை கிடைக்க அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது ?